## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2013

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம், 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 20 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை 3(iii) இன் பிரகாரம் தகவல்களை கண்டுபிடிக்க முடியாத பாடநெறிகள் தவிர அனைத்து பாடநெறி வருமானங்களும் பாடநெறி காலப்பகுதிக்கு விகித சமனாக கணக்கீடு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த வருமானம் கிடைக்கபெற்ற ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிறுவகத்தினால் 65 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 15,577,280 தொகை பதிவுக் கட்டணமாகவும் ரூபா 51,498,749 தொகை பாடநெறி கட்டணமாகவும் ரூபா 65,739,286 தொகை பரீட்சைக் கட்டணமாகவும் ரூபா 132,815,315 ஆன வருமானமொன்று பாடநெறிகள் வருமானமாக கிடைக்கப்பெற்றிருந்ததுடன், ஒவ்வொரு பாடநெறிகளுக்காக கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பாடநெறி வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு விகித சமனாக செலவு வைத்து எதிர்காலத்திற்காக கிடைக்கும் வருமானத்தை பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆண்டின் போது கிடைத்த வருமானம் பாடநெறி வருமானமாக எடுக்கப்பட்டிருந்தது. 08 பாடநெறிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது அப்பாடநெறிகளின் திரட்டிய வருமானம் ரூபா 8,699,500 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 3,491,380 தொகை மீளாய்வாண்டின் நிதிசார் செயலாற்றல் கூற்றில் வருமானமாகவும் ரூபா 3,330,480 நிதி நிலைமைக்கூற்றில் பிற்போடப்பட்ட வருமானமாகவும் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், ஆண்டின் திரட்டிய

வருமானமான ரூபா 3,644,500 தொகையை நிதிசார் செயலாற்றல் கூற்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் எதிராக இணக்கம் செய்யப்பட்ட முறையே ரூபா 146,012,472 தொகை மற்றும் ரூபா 238,316,770 தொகை முன்னெச்சரிக்கையாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

அரசின் அமைச்சு ஒன்றிலிருந்தும் அரச வங்கியொன்றிலிருந்தும் பெற வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 4,046,625 தொகையும் வாடகை வருமானம் ரூபா 2,666,250 தொகையுமாக ரூபா 6,712,875 கூட்டுத்தொகை 02 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையான காலவீச்சு கடந்திருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அறவிடப்படாமல் காணப்பட்டன.

**2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 03 நடைமுறையல்லாத சொத்து உருப்படிகளை நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிட்ட போது ரூபா 189,425,356 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(ஊ) பிரிவு மற்றும் 1980 ஏப்ரல் 10 ஆம் திகதிய 83/7 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு வழிகாட்டியின் 12(3) ஆம் பிரிவு | பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்காக பாடநெறி திட்டங்களைத் தயாரித்து பல்கலைக்கழகத்தின் பேரவையினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2005 திசெம்பர் 19 ஆந் திகதிய பீஈடீ/33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | முதலீடுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 92,887,489 தொகையான முதலீடுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கிடைத்திருக்கவில்லை. |
| (இ) 2000 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக விசேட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பொது மாதிரிப் படிவம் 287 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தில் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் திரண்ட பெறுமானத் தேய்வு, கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் ஆண்டின் போது உறப்பட்ட மூலதனக் கிரயம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | குறித்த செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் உரிய செயற்பாடு நிறைவு பெற்றவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 18 சந்தர்ப்பங்களில் 08 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணம் 40 நாட்கள் முதல் 139 நாட்கள் வரையான வீச்சில் தீர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 113,550 தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 183,557 தொகையான நானாவித வைப்புக்கள் என்பன உரிய செயற்பாடுகள் நிறைவுபெற்றதன் உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறித்த வைப்புப் பெறுமதியில் ரூபா 87,050 தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 144,717 தொகையான நானாவித வைப்புக்கள் என்பன 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 10,331,320 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,434,802 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,103,482 ஆல் குறைவடைந்தமைக்கு அரசாங்க மானியம் ரூபா 15,180,000 ஆல் அதிகரித்தமையும் ஏனைய வருமானம் ரூபா 41,672,778 ஆல் குறைவடைந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 வரை நிறுவகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடமைப் பட்டியல் மற்றும் அத்திகதியில் நிறுவகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களுடன் ஒப்பிடும் போது 81 உத்தியோகத்தர்களுக்காக நிறுவகத்தினால் கடமை பட்டியல் வழங்கப்படாமல் இருந்ததுடன், வழங்கப்பட்டிருந்த பணிப்பொறுப்புக்கள் 1994 – 2004 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டவையாக இருந்ததுடன், தற்போதைய கடமைகளின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்காக நிறுவகத்தினால் தனியார் நிறுவனமொன்று ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அச்செயற்பாட்டை நிறைவு செய்வதற்காக 53 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்த போதும் முழுத்தொகையான ரூபா 1,458,286 ஐ குறித்த தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியின் பிரகாரம் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன், அதில் 08 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. இவ்வாறு அத்தியாவசிய பதவிகள் வெற்றிடங்களாக இருக்கின்றமை நிறுவகத்தின் செயலாற்றல் தொடர்பில் நேரடியாக தாக்கமளிக்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.3 நிறுவத்தின் உத்தியோகத்தர்களுக்கிடையே வேலைகளை ஒப்படைத்தல்

நிறுவகத்தினால் உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்காக குறிப்பிட்ட காலப்பகுதியின் இறுதியில் உத்தியோகத்தர்கள் கடமைகளுக்கு இடையே மாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும், 26 உத்தியோகத்தர்கள் 07 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான காலப்பகுதியில் ஒரே பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

மீளாய்வாண்டின் முதல் காலாண்டில் கல்விசார் பிரிவில் நடாத்தப்பட்ட கூட்டங்களுக்காக உறப்பட்ட உபசரிப்புச் செலவினம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது உடனடி உணவுகளை வழங்குவதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது இறப்பர் முத்திரை அளவுகள் மாற்றம் செய்யப்பட்டு போலியான கையொப்பம் இட்டு சமர்ப்பித்த 116 பட்டியல்களுக்காக 12 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 286,384 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டு கட்டுப்பாடு

நிறுவகத்தினால் நடாத்திச் செல்லப்படும் ஒவ்வொரு பாடநெறிக்காகவும் வெவ்வேறாக பாதீட்டு மதிப்பீடு தயாரித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஆ) ஊழியர் நிர்வாகம்
(இ) கணக்கீடு